Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 208

வியாழக்கிழமை 22 ஜூன் 2023

ஆனி 07 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

## ஊடகவியலாளர்கள் இருவரிடம் விசாரணை

யாழ்ப்பாணம், ஜூன் 22

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரும், பொலிஸாரும் முரண்பட்ட சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியைச் சேர்ந்த இரு ஊடகவியலாளர்களிடம் நேற்றுப் பொலிஸார் வாக்குமூலம் பெற்றுள்ளனர்.

கிளிநொச்சி, இரணைமடுவில் உள்ள பிராந்திய குற்ற விசாரணைப் பிரிவினரால் சுமார் 2 மணி நேரம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. »10

## நாய்க்குட்டிகளை எரித்தவர் மீது நடவடிக்கை எடுப்பதில் அசமந்தம்

### பொலிஸாரின் அலட்சியப் போக்கால் பொதுமக்கள் கடும் விசனம்

கொழும்பு, ஜூன் 22

7 நாய்க்குட்டிகளை எரித்துக் கொலை செய்த கொடூரமான சம்பவம் தொடர்பில் நேற்றுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று அறியமுடி »10

## மன்னாரில் பரவுகிறது பனிப்பூச்சித் தாக்கம்!

மன்னார், ஜூன் 22

மன்னார் மாவட்டத்தின் சில பகுதிகளில் பனிப்பூச்சித் தாக்கம் இனங்காணப்பட்டுள்ளது என்று மன்னார் மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் மதனராஜ் குலாஸ் தெரிவித்தார். »11

# கடன் மறுசீரமைப்பின் ஊடாக பொறுப்புக்கூறலுக்கு உந்துக!

### நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் பரீஸ் கிளப்பிடம் கோரிக்கை

நியூயோர்க், ஜூன் 22

**இலங்கைக்கான கடன் மறுசீரமைப்பு மற்றும் உதவிகளை இராணுவச் செலவு மற்றும் சர்வதேச குற்றங்களுக்கான பொறுப்புக்கூறல் ஆகியவற்றுடன் இணைக்க வேண்டும் என்று நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் பரீஸ் கிளப்பிடம் கோரிக்கை விடுத்துள்ளது.** »11

## விபத்தில் காயமடைந்த ஆசிரியை உயிரிழப்பு

வவுனியா, ஜூன் 22

விபத்தில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்றுவந்த ஆசிரியை ஒருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். வவுனியா, செட்டிகுளம்- இலுப்பைக் குளத்தைச் சேர்ந்த மேரி றஞ்சலா (வயது- 51) »11

## காணி வாங்கச் சென்றவர் கட்டுத்துவக்கால் காயம்!

கிளிநொச்சி, ஜூன் 22

பளை, இயக்கச்சிப் பகுதியில் கட்டுத்துப்பாக்கி வெடித்து ஒருவர் படுகாயமடைந்துள்ளார். »11

## அபிவிருத்திக் கூட்டமா? அரசியல் கூட்டமா?

யாழ்ப்பாணம், ஜூன் 22

யாழ். மாவட்டத்திலுள்ள சமுர்த்தியுடன் தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் கிராம அலுவலர்கள் அனைவரையும் ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர் என்ற கோதாவில் »10

## கிளி. தெற்கு வலயப் பணிப்பாளர் மீது உடன் நடவடிக்கை எடுக்குக

### இல்லையேல் போராட்டம் வெடிக்கும் இலங்கை ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 22

கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளரின் முறைகேடுகள், அதிகாரத் துஷ்பிரயோகங்கள், பழிவாங்கல்கள் மற்றும் கீழ்த்தரமான செயற்பாடுகள் தொடர்பில் இருவாரங்களுக்குள் வடக்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லாவிட்டால் »10

### பௌத்தமயமாக்கலை எதிர்த்து

## குருந்தூர்மலை அடிவாரத்தில் குவிந்து மக்கள் போராட்டம்!

### கம்மன்பிலவுக்கும் கடும் எதிர்ப்பு

முல்லைத்தீவு, ஜூன் 22

தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் உதயகம்மன்பில குழுவினர் நேற்று வரவுள்ளனர் என்று அறிவிக்கப் »10

## சந்தேகங்களைத் தீர்ப்பதற்கே நேரில் வந்தாராம் கம்மன்பில!

கொழும்பு, ஜூன் 22

வடக்கு மற்றும் கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இங்கிருந்து கொழும்புக்கு வந்து மக்கள் பிரச்சினையைக் கூறுகின்றார்கள். எனினும், அதன் உண்மைத் தன்மை எமக்குத் தெரியாது. அதைத் »10

## இந்தியாவில் கைதானவரை மறியலில் வைத்தது மன்று!

### புலிகளின் முக்கியஸ்தராம்

கொழும்பு, ஜூன் 22

இந்தியாவில் தலைமறைவாக இருந்தார் என்றும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர் என்றும் கூறப்படும் செ.சுதாகரன் என்பவர் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவர் சர்வதேசப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு இந்தியாவிலிருந்து நாடு கடத்தப் »11

## அல்லைப்பிட்டியில் நேற்றும் மனித உடல் எச்சங்கள் மீட்பு!



கொழும்பு, ஜூன் 22

அல்லைப்பிட்டியில் நேற்று முன்னெடுக்கப்பட்ட அகழ்வு நடவடிக்கைகளில் மனித எலும்பு எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன. அங்கிருந்து மீட்கப்பட்ட »12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நலன்புரிக் கொடுப்பனவு

# புதிய பயனாளிகள் பட்டியல் வெளியீடு

## ஆட்சேபனைக்கு 10 நாள்கள்

**கொழும்பு, ஜூன் 22**

**சமுர்த்திக் கொடுப்பனவுகள் உள்ளிட்ட அரசால் வழங்கப்படும் பயனாளிகளுக்கான நலன்புரி உதவித் திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளின் பட்டியல் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நிதியமைச்சில் வெளியிடப்பட்டுள்ளது. புதிய பயனாளிகள் தெரிவில் 23 லட்சம் பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.**

| உதவித் திட்ட வகைகள் | மாதாந்தம் |
|---|---|
| மிக வறுமை | 15,000 ரூபா |
| வறுமை | 8,500 ரூபா |
| பாதிப்புக்குள்ளானோர் | 5,000 ரூபா |
| நிலையற்ற வருமானம் | 2,500 ரூபா |

நலன்புரி உதவித் திட்டத்துக்கு தெரிவுசெய்யப்பட்ட புதிய பயனாளிகளின் பட்டியல் பிரதேச செயலக பிரிவுகள் மற்றும் கிராமஅலுவலர் பிரிவுகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது என பதில் நிதியமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அதேவேளை https://tinyurl.com/wbblist எனும் முகவரியை கிளிக் செய்து உங்கள் மாகாணம், மாவட்டம், பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் கிராமஅலுவலர் பிரிவு என்பவற்றை தெரிவு செய்தும் பார்வையிட முடியும்.

பொருத்தமான ஒருவர் இந்தத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படாமல் இருப்பின், 10 நாள்களுக்குள் அதாவது எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்பதாக ஆட்சேபனைகள் மற்றும் மேன்முறையீடுகளை சமர்ப்பிப்பதற்கான அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் வங்கிக் கணக்கில் ஜூலை மாதத்திலிருந்து பணம் நேரடியாக வரவு வைக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## மேதானந்த தேரரின் கருத்து இனவாதத்தின் வெளிப்பாடே

### கஜேந்திரன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 22

குருந்தூர்மலைப் பகுதியில் தமிழர்கள் வாழவில்லை என்று 'தொல்பொருள் சக்கரவர்த்தி' என்று குறிப்பிட்டுக் கொள்ளும் எல்லாவெல மேதானந்த தேரர் வெளிப்படுத்தும் கருத்துகள் இனவாதத்தினதும், மதவாதத்தினதும் ஒட்டுமொத்த வெளிப்பாடே என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிங்களப் பேரினவாதம் தயாரித்த வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தொடர்பான தொல்பொருள் மரபுரிமை அறிக்கைகளை ஏற்கமுடியாது. யுனெஸ்கோவின் நேரடிக் கண்காணிப்பின்கீழ் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள தொல்பொருள் மரபுரிமைகள் ஆராய்ச்சி செய்யப்படவேண்டும். ஆட்சியாளர்கள் மத்தியில் சிறந்த அர்த்தபூர்வமான மாற்றம் ஒன்று ஏற்படாத வரை இந்த நாடு ஒரு போதும் முன்னேற்றமடையாது. தமிழ், முஸ்லிம், மக்களின் தனித்துவ அடையாளங்களை அழித்து சிங்கள பௌத்தர்களுக்கு மாத்திரம் முன்னுரிமை வழங்கி இனவாதத்தையும் மதவாதத்தையும் முன்னிலைப்படுத்திச் செயற்படுவது சிறந்ததல்ல. குருந்தூர்மலைப் பகுதியில் தமிழர்கள் வாழவில்லை என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ளமுடியாது. புத்தசாசன அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க இனவாதத்தை முன்னிலைப்படுத்தி செயற்படுகின்றார் - என்றார். (ம-இ)

### வீட்டுகட்டித் தருவதாக

## பெரமுன உறுப்பினரால் ரூ.70 லட்சம் மோசடி!



கொழும்பு, ஜூன் 22

வீடு கட்டித் தருவதாக 70 லட்சம் ரூபா மோசடி செய்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட பொது ஜன பெரமுனக் கட்சியைச் சேர்ந்த மாநகர சபை முன்னாள் உறுப்பினர் மஹிந்த கஹந்தகமவை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளது.

நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான மெட்ரோ வீட்டுத் தொகுதியில் வீடு கட்டித் தருவதாக குறித்த நபர் பணமோசடி செய்துள்ளார் என கண்டியைச் சேர்ந்த நபரொருவர் மோசடி விசாரணைப் பணியகத்தில் அண்மையில் முறையிட்டார்.

முறைப்பாட்டுக்கமைய சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டு மேலதிக விசாரணையின் பின் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (ச-இ)

### மறுசீரமைப்புக்கு முன்னர்

## பெருமுதலைகள் ஏப்பம்விட்ட ரூ.1,300 கோடியை அறவிடுக



கொழும்பு, ஜூன் 22

தேசிய கடன் மறுசீரமைப்பால் பெருந்தோட்டத் தொழிலாளர்கள், ஆடைத்தொழிலாளர்கள் உட்பட உழைக்கும் மக்கள் பாதிக்கப்படுவார்கள். இந்தக் கடன் மறுசீரமைப்புக்கு முன்னர், வர்த்தகர்கள், செல்வந்தர்கள் உள்ளிட்டோர் அரச வங்கிகளிடமிருந்து பெற்றுக்கொண்டுள்ள ஆயிரத்து 300 பில்லியன் ரூபா கடனை மீளப் பெற்றுக்கொள்ள நிதி அமைச்சு விசேட கவனம் செலுத்தவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2020ஆம் ஆண்டு வழங்கப்பட்ட சீனி வரி குறைப்பால் 16 மில்லியன் ரூபா அரச வருவாய் இழக்கப்பட்டுள்ளது என கணக்காளர் நாயகம் அறிக்கை சமர்ப்பித்துள்ளார். பிணை முறி மோசடியைக் காட்டிலும் இந்த மோசடி பாரதூரமானது. அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு நிதியமைச்சு இதுவரை எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. சீனி வரிக் குறைப்பின் பயனின் 45 சதவீத இலாபத்தை ஒரு தனி நிறுவனம் பெற்றுள்ளது. வலுவான 6 நிறுவனங்கள் சம இலாபத்தைப் பெற்றுக்கொண்டுள்ளன. இந்த நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமல் சாதாரண மக்கள் மீது வரி சுமத்துவது முறையற்றது - என்றார். (ம-இ)

## விரயங்களைத் தவிர்க்க முன்னுரிமையளிக்குக

### பிரதமர் வேண்டுகோள்



கொழும்பு, ஜூன் 22

திணைக்களங்கள் மற்றும் அரச நிறுவனங்களின் வீண்விரயங்களைக் கட்டுப்படுத்த முன்னுரிமையளித்துச் செயற்படுவது அவசியமாகும். இல்லையாயின் அது பொது மக்களுக்கே பெரும் பாதிப்புகளுக்கு வழிவகுக்கும் என பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற நாடாளுமன்ற வரவு - செலவுத் திட்ட அலுவலகம் சட்டவரைவு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

திணைக்களங்கள் மற்றும் அரச நிறுவனங்களில் வீண் விரயங்கள் இடம்பெறவில்லை என எவராலும் கூற முடியாது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நாம் சமர்ப்பிக்கும் சில புள்ளிவிவரங்கள் மற்றும் தகவல்கள் முறையற்ற - மோசடிமிக்கதாகக் காணப்படின் அதன்மூலமான வீண்விரயம் விசாலமானதாக இருக்கும். இவ்வாறான மோசடிக்காரர்களின் சுமையை இறுதியில் திறைசேரி அல்லது நாடாளுமன்றமே பொறுப்பேற்கவேண்டியுள்ளது. அது பொது மக்களுக்கான பாதிப்புகளுக்கே வழிவகுக்கும் - என்றார். (ச-இ)

## பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பில் இணை அனுசரணை நாடுகள் கவலை!

இலங்கையில் பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்ந்து நடைமுறையில் உள்ளமை தொடர்பில், இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் தீர்மானத்தை முன்மொழிந்த இணை அனுசரணை நாடுகள் கவலை கொண்டுள்ளன. பிரிட்டனின் மனித உரிமைக்கான பிரதிநிதி ரிட்டா பிரென்ஞ், அனுசரணை நாடுகள் குழுவின் சார்பில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இலங்கை தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்தார். அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

நிலங்களை விடுவித்தல், நீண்டகால தடுத்துவைப்பு மற்றும் ஊழல் ஆகியவை குறித்த கரிசனைகளுக்குத் தீர்வைக் காண்பதற்காக இலங்கையின் ஆரம்பகட்ட நடவடிக்கைகளை வரவேற்கின்றோம். இது, இலங்கையின் அனைத்து இன மற்றும் மத சமூகத்தினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான அடிப்படையாக அமையலாம். தொடர்ந்தும் பயங்கரவாதத் தடைச்சட்டம் பயன்படுத்தப்படுவது குறித்து நாங்கள் கரிசனை கொண்டுள்ளோம். பயங்கரவாதத் தடைச்சட்டத்தை மாற்றுவதற்கு தற்போது நடவடிக்கைகள் இடம்பெறுவதை ஏற்றுக்கொள்கின்றோம். பயங்கரவாதத் தடைச் சட்டம் சர்வதேச தராதரங்களுக்கு ஏற்ப காணப்படவேண்டும் என இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம். நல்லிணக்கத்துக்கான தனது அர்ப்பணிப்பை நோக்கி இலங்கை தனது முதற்கட்ட நடவடிக்கையை எடுக்கின்ற நிலையில், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் என்பனவற்றில் அனைவரையும் உள்வாங்க வேண்டிய தன் அவசியத்தை நாங்கள் வலியுறுத்துகின்றோம் - என்றுள்ளது. (ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரனின் உடற்கூற்றறிக்கையை வெளியிடுவது பெரும் ஆபத்தானது!

## தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலென பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு!



**கொழும்பு, ஜூன் 22**

**தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையை வெளியிடுவது, தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.**

பிரபாகரனின் உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையை, தகவலறியும் உரிமைச் சட்டத் தின்கீழ், ஊடகவியலாளர் மிதுன் ஜயவர்த்தன கோரியிருந்தார். பிரபாகரனின் உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கை, டி.என்.ஏ. பரிசோதனை அறிக்கை, உயிரிழந்தது பிரபாகரன் என உறுதி செய்வதற்கு யாரிடமிருந்து மாதிரிகள் பெறப்பட்டன? என்பது தொடர்பான தகவல்களை வழங்குமாறு அந்த விண்ணப்பத்தில் கோரப்பட்டிருந்தது. இந்த நிலையிலேயே, 'தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், இந்தத் தகவல்களை வழங்கினால் தேசியப் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்படும்' என்று குறிப்பிட்டு இலங்கை இராணுவமும், பாதுகாப்பு அமைச்சும் ஊடகவியலாளரின் கோரிக்கையை நிராகரித்துள்ளன.

இறுதி யுத்தம் நிறைவடைந்து 14 வருடங்கள் கடந்துள்ள போதிலும், பிரபாகரனின் இறப்புத் தொடர்பான சர்ச்சைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. குறிப்பாக பிரபாகரனின் மரபணு (டி.என்.ஏ.) பரிசோதனை, உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கைகளை இலங்கை அரசாங்கம் வெளிப்படுத்தாமல் இருப்பதாக குற்றஞ்சுமத்தப்படுகிறது. இதனைக் காரணங்காட்டி பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் என்கிற வாதங்களும் முன்வைக்கப்படுகின்றன. எனினும், அதனை இலங்கை அரசாங்கம் திட்டவட்டமாக மறுத்து வருகிறது. இவ்வாறானதொரு பின்னணியில், இந்தத் தகவல் கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# 'யூரியூப்' பார்த்து துப்பாக்கி தயாரிப்பு



## களுத்துறையில் இருவர் கைது!

கொழும்பு, ஜூன் 22

'யூரியூப்' காணொலிகளைப் பார்த்து துப்பாக்கிகளை தயாரித்த பதுரலிய சீலதோல பிரதேசத்தைச் சேர்ந்த இருவர், துப்பாக்கி தயாரிக்கப் பயன்படுத்திய உபகரணங்களுடன் கடந்த திங்கட்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தயாரிக்கப்பட்ட அந்த துப்பாக்கிகளைப் பயன்படுத்தி சந்தேகநபர்கள் குற்றச்செயல்களில் ஈடுபட்டுள்ளார்களா? என்பது தொடர்பிலும் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-ரி2)

வாள்வெட்டு;

# இருவர் கைது



யாழ்ப்பாணம், ஜூன் 22

இளவாலையில் இடம்பெற்ற வாள் வெட்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் மற்றொரு சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என இளவாலை பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வாரம் ஐவரடங்கிய குழுவொன்று இளவாலை பகுதிக்கு சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த ஒருவரை வரவழைத்து வாளால் தாக்கிவிட்டுத் தப்பிச் சென்றது. சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் அளவெட்டி பகுதியைச் சேர்ந்த சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்தநிலையில் ஐவரடங்கிய குழுவில் 23 வயதான மற்றொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-125)

பழுது சீராகும்வரை

# ஊர்காவற்றுறை – காரைநகர் தற்காலிகமாகப் படகுப்பாதை



காரைநகர்- ஊர்காவற்றுறைக்கு இடையிலான கடற்பயணத்துக்கான படகுப் பாதை பழுதடைந்த நிலையில், அதன் கேபிள் மாற்றப்பட்டு தற்காலிக சேவை முன்னெடுக்கப்படும் என வடமாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

காரைநகர், வட்டுக்கோட்டை பகுதிகளிலிருந்து ஊர்காவற்றுறையில் கடமைபுரியும் உத்தியோகத்தர்கள் மற்றும் வேறு தேவைகளுக்குப் பயணம் செய்வோர் குறித்த கடற்பாதையையே பயன்படுத்துகின்றனர்.

இந்தப் படகுப்பாதை தற்போது பழுதடைந்துள்ளது. அதனால் கடற்பயணத்தில் ஈடுபடும் பயணிகள் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கி கட்டணம் செலுத்தி வேறு படகு மூலம் பயணம் செய்யவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் படகுப் பாதையில் கேபிள் மாற்றப்பட்டு தற்காலிகசேவை இடம்பெறும். இரண்டு வாரங்களின் பின்னர் அடித்தளப் பழுது சீர்செய்யப்படும். படகுச்சேவைகள் திருத்த நேரங்களில் இலவச படகுச் சேவை முன்னெடுக்கப்படும் என அதிகாரசபையின் மாகாணப் பணிப்பாளர் குறூஸ் தெரிவித்துள்ளார். (ச-125)

# மாணவியைக் கத்தியால் தாக்கிய மாணவன் சரண்

அநுராதபுரம், ஜூன் 22

15 வயதான பாடசாலை மாணவன், 16 வயதான சக மாணவியை கத்தியால் குத்திய சம்பவமொன்று அநுராதபுரம், கெக்கிராவ ரணஜயபுர பிரதேசத்தில் பதிவாகியுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

தாக்குதலுக்கு இலக்கான மாணவிக்கு இடதுகை மற்றும் இடதுகாலில் காயம் ஏற்பட்ட நிலையில் சிகிச்சைக்காக அநுராதபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கத்தியால் குத்தித் தாக்கிய மாணவன் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன என ரணஜயபுர பொலிஸார் தெரிவித்தனர். (ச-ரி3)




**'இலங்கையிலேயே இப்பவும் கொரோனாத் தொற்று இருக்கிற இடம் எது?'**

**ஒரு மீடியாக்காரர் பட்சியிட்டக் கேட்ட கேள்வி இது. கொஞ்சநேரத்தில கேள்வியைக் கேட்ட அந்த மீடியாக்காரரே பதிலையும் சொன்னார்.**

**'யாழ்ப்பாணக் கோட்டையிலதான் இப்பவும் கொரோனா கடுமையாத் தொத்துது? அதாலதான் அந்தப் பக்கமாத் திரியிற பொம்பிளைப் பிள்ளையளும், பெடியளும் உடுப்புப்போட மறந்தாலும் மாஸ்க் போட மறக்கிறேலை. அந்தளவுக்கு அந்த இடத்தில கொரோனாக் குடோனே இருக்குப் போல'**

**அவர் சொன்னதுக்குப் பின்னால கடும் நக்கல் இருந்தாலும், கண்ணுக்கு முன்னால நடக்கிற சீரழிவு ஒண்டை நாங்கள் கண்டும் காணாமல் இருக்கிறம் எண்டது அப்பதான் உறைச்சுது.**

**சண்டை முடிஞ்ச பிறகு கோட்டையையும் அதைச் சுத்தி இருக்கிற முனியப்பர் கோயிலடி, பண்ணைக் கடற்கரை ஏரியாக்களில தொடங்கின இளசுகளின்ர நடமாட்டம் இப்ப கடுமையாக் கூடிப்போட்டுது. ஏனெண்டால் ரவுனுக்கு கிட்ட உள்ள, ஆக்கள் நடமாட்டம் குறைவான, ஒளிச்சிருந்து கதைக்கக் கூடிய இடங்கள் இஞ்சதான் இருக்கு. வீட்டில ரியூசனுக்கு எண்டு சொல்லிப்போட்டு வாற பிள்ளையளுக்கும், பஸ்ஸால வந்து இறங்கினவுடன தங்கட சோடியளோட போறதுக்கும் இந்த இடங்கள்தான் வசதி. அதால கொழும்பு 'கோல்பேஸை' விடவும் இஞ்சதான் சோடியளும் கூட, சோலியளும் கூட.**

**கொரோனா வந்தது இப்பிடியான சோடியளுக்கு இன்னும் வசதியாப் போட்டுது. முந்தி இந்த இடங்களுக்கு சோடியா வாறவை, அந்தப் பக்கத்தால போய்வாறவையை பார்த்துப் பார்த்துத்தான் கதைப்பினம். ஏனெண்டால், தெரிஞ்சவை ஆரும் கண்டால் சிக்கலாயிடுமெல்லோ. ஆனால் கொரோனா வந்ததோட முகத்தை மறைக்கிறதுக்கு மாஸ்க் வந்ததால இப்ப அந்தப் பயமும் இல்லை. அதால வாற சோடியளின்ர தொகையும் கூடிட்டுது. தனிய சோடியள் மட்டும் உங்க வாறேலை. குடுக்காரருக்கும் இந்த ஏரியா தான் தஞ்சம்.**

**கிட்டடியில ஒரு பொம்பிளைப் பிள்ளை தன்ர தகப்பனோட யாழ்ப்பாணம் லைப்ரரிக்கு வந்திருக்குது. தகப்பன் வெளியில இருக்கிற பேப்பர்களை வாசிச்சுக் கொண்டிருக்க, 'உள்ளுக்கதான் பாடம் சம்பந்தமான புத்தகங்கள் இருக்கு. நான் நோட்ஸ் எடுத்திட்டு வாறன். நீங்கள் இஞ்ச இருங்கோ' எண்டு சொல்லிப்போட்டு, உள்ளுக்க போய், மாஸ்க் ஒண்டைப் போட்டுக்கொண்டு அந்தப்பிள்ளை லைப்ரரியின்ர பின்பக்க கேற்றால வெளியில வந்து, கோட்டைப் பக்கமாகப் போட்டுது. அங்க சோடியா இருந்து சோலியை முடிச்சிட்டு, அதே பின் கேற்றால லைப்ரரிக்குள்ள வந்து, மாஸ்க்கை கழட்டிப் போட்டு தகப்பனோட வீட்டை போயிருக்குது. 'இவ்வளவு நேரமும் என்ர பிள்ளை எவ்வளவு அக்கறையா லைப்ரரியில படிச்சிருக்கே' எண்ட புளுகத்தில தகப்பன் போயிருப்பார்.**

**இப்பிடி ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கூத்து. பகிடி என்னெண்டால், பக்கத்தில தான் பொலிஸ் ஸ்ரேசன் இருந்தாலும், அவை அணிலேற விட்டிட்டு ஆவெண்டு பார்த்துக் கொண்டிருப்பினமே தவிர உருப்படியா ஒருத்தரைக் கூட பிடிக்கமாட்டினம். சோடியளும், குடுக்காரரும் இஞ்ச படையெடுக்கிறதுக்கு 'பொலிஸ் இஞ்ச ஒண்டும் செய்யாது' எண்ட தைரியமும் ஒரு காரணம். இனியாவது காக்கிமார் கொஞ்சம் கவனமெடுப்பினமோ?**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுமுகாமைத்துவம் வேண்டும்

## நல்லூர் வீரமாகாளி அம்பாள் அடியவர்கள் மனு கையளிப்பு

**யாழ்ப்பாணம், ஜூன் 22**
**நல்லூர் அருள்மிகு ஸ்ரீவீரமாகாளி தேவஸ்தானத்தை நிர்வகிப்பதற்கான பொது முகாமைத்துவத்தை ஏற்படுத்தி, எதிர்வரும் ஆண்டுகளில் ஆலயத் திருவிழாவை தடையின்றி நடத்த ஆவன செய்யவேண்டும் என அடியவர்கள் கோரியுள்ளனர்.**

நல்லூர் பிரதேச செயலாளரிடம் மனுவொன்றைக் கையளித்து இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளனர். அதில் உள்ளதாவது:
இந்த ஆலயத்தின் 3 குடும்பங்களைச் சேர்ந்த பூசகர்களிடையிலான நீண்டகால முரண்பாடு காரணமாக கடந்த 9ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாக வேண்டிய மஹோற்சவம் தடைப்பட்டது. யாழ்.நீதிவான் நீதிமன்ற உத்தரவுக்கமைய மீள மஹோற்சவம் இடம்பெறுகிறது.
எதிர்வரும் ஆண்டுகளில் திருவிழா தடையின்றி இடம்பெற வேண்டும். அதற்கு ஆலய மஹோற்சவ உபயகாரர்கள், பொதுமக்கள் இணைந்து ஆலயத்தை நிர்வகிப்பதற்கென பொது முகாமைத்துவம் வேண்டும் - என்று குறிப்பிட்டுள்ளனர்.
மக்கள் கையளித்த மனுதொடர்பில் பிரதேச செயலாளரிடம் கேட்ட போது,
3 குடும்பங்களிடமும் தனித்தனியாக அபிப்பிராயம் பெறப்படவுள்ளது. ஆலய மஹோற்சவம் நிறைவடைந்ததும் பொதுமுகாமைத்துவம் அமைப்பது தொடர்பில் ஆராயப்படும் - என்றார். (ச-ரி3-125)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். நீண்டநாள் விருப்பத்தை நிறைவேற்றி மகிழ்வீர்கள். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**இடபம்:** உடல்நலனில் கவனம் செலுத்தவும். தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுடன் திடீர்ச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு.

**மிதுனம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள். உறவினர்கள் மூலம் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும்.

**கடகம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். பிணக்குகள் நீங்கி சுமுகமான சூழ்நிலை ஏற்படும். அனுகூலம் உண்டாகும்.

**சிம்மம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவு கிடைக்கும். எதிர்பார்த்த காரியம் தாமதமாகும். விற்பனையும் லாபமும் எதிர்பார்த்தபடியே இருக்கும்.

**கன்னி:** சகோதரர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மகிழ்ச்சிதரும் செய்தி உங்களை உற்சாகப்படுத்தும். சற்று அலைச்சலும் சோர்வும் ஏற்படும். வீண்செலவுகள் ஏற்பட வாய்ப்பு.

**துலாம்:** காரியங்கள் அனுகூலமாகும். தேவையான பணம் கிடைக்கும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். ஆதாயம் உண்டாகும். பணியாளர்கள் உற்சாகமாக வேலை செய்வார்கள்.

**விருச்சிகம்:** திடீர்ச் செலவுகள் ஏற்படும். தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும்.

**தனுசு:** காரியங்கள் இழுபறியாகும். தந்தை வழியில் வீண் செலவுகளும் தேவையற்ற பிரச்சினைகளும் ஏற்படக்கூடும். எதிர்ப்புகள் விடயத்தில் எச்சரிக்கையாக இருக்கவும்.

**மகரம்:** சங்கடங்கள் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சிலருக்கு தெய்வப்பணிகளில் பங்கேற்கும் வாய்ப்பு ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும்.

**கும்பம்:** மகிழ்ச்சியான நாள். மன உறுதியுடன் செயற்படுவீர்கள். எதிர்பாராத பண இலாபம் உண்டாகும். மகிழ்ச்சி உண்டாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**மீனம்:** எதிலும் நிதானமாகச் செயற்படவும். சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். வீண்விவாதம் ஏற்படக்கூடும். சுமுகமான உறவை ஏற்படுத்திக்கொள்ள முயற்சி செய்யவும்.

# குருதிக்கொடை

யாழ்ப்பாணம், ஜூன் 22
அராலி இந்துக் கல்லூரி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பாடசாலைச் சமூகத்தினரால் குருதிக்கொடை முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
எதிர்வரும் ஜூலை 7 மற்றும் 8 ஆம் திகதி இந்தக் குருதிக்கொடை முகாம் பாடசாலை வளாகத்தில் இடம்பெறவுள்ளது.
இதில் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், குருதிக்கொடையாளர்கள் பங்கேற்று குருதிக்கொடையளிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச-ரி2)

## யாழ்.பல்கலையில்

# 'ஆரோக்கியமான உணவு' 'மகிழ்ச்சியான மனநிலை'

யாழ்ப்பாணம், ஜூன் 22
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் AIESEC அமைப்பின் ஏற்பாட்டில் 'யாழ் Youth Speak Forum' நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.பல்கலையின் மருத்துவபீடத்தின் ஹூவர் மண்டபத்தில் பிரமாண்டமாக இடம்பெறவுள்ளது.
ஐ.நா. சபையின் நிலைபேண்தகு குறிக்கோள்களில் ஒன்றான 'ஆரோக்கியமான உணவு' மற்றும் 'மகிழ்ச்சியான மனநிலை' எனும் தலைப்புகளை மையப்படுத்தி இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.
பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவ, மாணவியர்களுக்கும் பயனுள்ளதாக 16 வயதுக்கு மேற்பட்ட இளையோரை மையப்படுத்தி இந்த நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது என ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (ச)

# கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 22
அரியாலை வெட்டுக்குளம் அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.
தொடர்ந்து 10 நாள்கள் உற்சவம் இடம்பெறவுள்ளது.
எதிர்வரும் 29ஆம் திகதி வியாழக்கிழமை சப்பறத் திருவிழாவும் மறுநாள் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் முதலாம் திகதி சனிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும் என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ச-ரி3)



# 'டைட்டானிக்' பார்க்க சுற்றுலா சென்ற நீர்மூழ்கி மாயம்!

வொஷிங்டன், ஜூன் 22
அட்லாண்டிக் கடலில் மூழ்கிய 'டைட்டானிக்' கப்பலின் சிதைந்த பாகங்களைப் பார்ப்பதற்கு சுற்றுலாப் பயணிகளுடன் சென்ற நீர்மூழ்கிக் கப்பல் காணாமற்போயுள்ளது எனத் தகவல் வெளியாகியுள்ளது.
1912 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 ஆம் திகதி நள்ளிரவில் பயணித்த டைட்டானிக் கப்பல் அட்லாண்டிக் கடலில் பனிமலையில் மோதி விபத்துக்குள்ளானது. வரலாற்றில் இடம்பிடித்த டைட்டானிக் கப்பல் விபத்தில் ஆயிரத்து 500 பேர் பலியாகினர்.
இந்தநிலையில், கப்பல் மூழ்கிய இடத்தை பார்வையிட சில சுற்றுலாப் பயணிகளை அழைத்து கடந்த 19ஆம் திகதி புறப்பட்ட நீர்மூழ்கிக் கப்பல் திடீரென மாயமாகியுள்ளது என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.
5 பேருடன் சென்ற நீர்மூழ்கிக் கப்பலே புறப்பட்டு 45 நிமிடங்களுக்குப் பின்னர் தொடர்புகளில் இருந்து மாயமாகியுள்ளது எனக் கூறப்படுகிறது. 'டைட்டானிக்' கப்பலைக் காண்பதற்கு சுற்றுலாப் பயணம் மேற்கொண்ட இந்தச் சம்பவம், உலகளவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## கடலம்மா! மீனவர்களுக்கு நீதி சொல்ல எவருமில்லையா?

மீன்பிடிக்கான தடைக்காலம் இந்தியாவில் முடிவுற்ற கையோடு, கட்டவிழ்த்துவிட்ட பட்டிமாடுகள்போல மீண்டும் வடக்குக் கடலில் தமிழக மீனவர்கள் அத்துமீறி மேயத்தொடங்கிவிட்டார்கள். தொடர்ச்சியாக மீன்களைப் பிடிப்பதால் அவற்றுக்கு இனப்பெருக்கத்துக்கான அவகாசம் கிடைக்காது என்பதால், தமிழக மீனவர்கள் ஒவ்வொரு வருடமும் 61 நாள்கள் தடைக்காலம் ஒன்றைப் பின்பற்றுகின்றனர். குறித்த காலப்பகுதியில் மீன்களின் இனப்பெருக்கத்துக்குரிய வெப்பத்துடன் கூடிய சூழலும் நிலவுவதால், கடலில் மீன்வளம் நிலையாகப் பேணப்பட வழியேற்படுகின்றது. இந்தவருடமும் அந்தத் தடைக் காலம் ஏப்ரல் 15 முதல் ஜூன் 14 வரை அமுல்படுத்தப் பட்டு, ஜூன் 15 முதல் தமிழக மீனவர்கள் கடலில் கால் வைக்க அனுமதி வழங்கப்பட்டது. தடைக்காலம் முடிந் தது தான் தாமதம் தங்கள் கடற்பகுதியில் இருக்கும் மீன் களைப் பிடிக்காமல் பழக்கதோஷத்தில் வடக்குக் கடலை நோக்கித்தான் தங்கள் படகுகளைப் பாயவிட்டிருக்கிறார் கள். அப்படி வந்தவர்களில் 9 மீனவர்கள் இலங்கைக் கடற்படையிடம் பிடிபட்டுமிருக்கிறார்கள்.

'தடைக்காலம் முடிந்ததும் இவ்வாறு இந்திய மீனவர் கள் எமது கடற்பிரதேசத்துக்குள் அத்துமீறுவார்கள். அத னைத் தடுத்து நிறுத்துங்கள்' என்று கடற்றொழிலாளர் அமைப்புகள் அதிகாரிகளுக்கும், இந்தியத் துணைத் தூத ரகத்துக்கும் மனுவையும் கொடுத்திருந்தார்கள். வெள்ளம் வர முன்னர் மீனவர் அமைப்புகள் அணைகட்டுமாறு கோரிக்கை விடுத்தும் கூட, உரியவர்கள் அதைப்பற்றி எவ் வித அக்கறையும் காட்டவில்லை. அதன் விளைவே, மீண் டும் நிகழத் தொடங்கியிருக்கும் இந்திய மீனவர்களின் இந்த அத்துமீறல்கள். வடக்குக் கடலின் ஒருபகுதியை சீனக் கடலட்டைப் பண்ணைகளும், எஞ்சிய கடற்பகுதி களை இந்தியமீனவர்களும் பங்குபோட்டுக்கொள்ள, இந் தக் கடலின் மைந்தர்கள் பட்டினியால் சாவதைத்தான் இலங்கை – இந்திய அரசுகள் விரும்புகின்றன போலும். இவ்விரு அரசுகளும் மனம்வைத்தால் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை ஒரேநாளிலேயே எட்ட முடியும். ஆனால், அதற்கு அவர்கள் தயாராயில்லை.

இந்த அத்துமீறல்களைத் தடுக்கவேண்டிய கடற்றொ ழில் அமைச்சரே 'இலங்கைக் கடற்படையின் டோறாப் பட்குகளைக்கூட மோதி உடைக்கும் வலிமை இந்திய மீனவரின் படகுகளுக்கு உண்டு. அதனால்தான் அவர் களைப் பிடிக்கமுடியாமல் இருக்கின்றது' எனப் பம்மும் போது, இந்திய மீனவர்கள் இன்னும் கரைக்கு வந்து எங் கள் கடல்வளத்தை அடியோடு சுரண்டத்தானே செய்வார் கள். இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து, வடக்கு மீனவர்கள் பலமுறை போராட்டங்களை நடத்திக் களைத்துவிட்டார்கள். அதன் பின்னரும் இந்திய மீனவர் களின் கடற்சுரண்டல் தொடர்ந்ததால், பொறுமையிழந்து போய் 'இலங்கைக் கடற்படை ஒதுங்கிக் கொண்டால் இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்த எம்மால் முடியும்' என்றும் மீனவர் தரப்பில் சொல்லப்பட்டது. அதைச் செய லிலும் அவர்கள் செய்து காட்டினார்கள். அத்துமீறிய பல இந்தியமீனவர்களையும் அவர்களின் படகுகளையும் கட லில் சிறைப்பிடித்து, அவர்களைக் கடற்படையிடம் ஒப் படைத்தார்கள். ஆனால், அவர்களும் பின்னர் விடுவிக்கப் பட்டார்கள். இப்படி அத்துமீறும் மீனவர்களும், படகு களும் பிடிக்கப்படுவதும் பின்னர் விடுவிக்கப்படுவதும் வாடிக்கையாகி விட்ட நிலையில், வடக்கு மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினை தொடர்ந்த வண்ணமே இருக் கின்றது.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வழிவகைகள் இருந்தும் அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு அதற்கான மனமில்லை. இந்தநிலைமை தொடர்ந்தால் வடக்கு மீன வர்கள் மீன்பிடியைக் கைவிட்டு வேறு தொழில்களுக்குச் செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலையே ஏற்படும். இத னால் ''வடக்குக் கடலில் ஒரு காலத்தில் வடக்கு மீனவர் களும் மீன்பிடித்தார்கள்'' என்று கூறும் நிலைமை உருவா கும். எங்கள் மீன் வளம் சுரண்டப்பட்டு, நாம் அதற்கும் வேறொருவரிடம் கையேந்தவும் நேரிடும். ஆனால், இவை பற்றிக் கவலைப்பட இங்கு எந்தத் தலைவர்களும் இல்லை என்பதுதான் நிதர்சனம்.

### நாளொரு நல்வார்த்தை

"தடைகள் உங்களை நிறுத்தி விடாது, நீங்கள் அதனுள் புகுந்து செயற்படும்போது"

– மைக்கேல் ஜோர்டன்




### இராணுவத்துக்கான

# உணவுக் கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டுள்ளது!



கொழும்பு, ஜூன் 22

**இராணுவத்தளபதி விகும் லியனகேயின் வேண்டுகோளின் அடிப்ப டையில், இராணுவத்தினருக்கான உணவுக் கொடுப்பனவுத் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கான அனுமதியை முப்படைகளின் தலை வர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கியுள்ளார்.**

2022ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி நிலையைக் கருத்திற்கொண்டு. இந்தப் பொருளாதார நெருக்கடியை இரா ணுவத்தினர் சமாளிக்கும் விதமாக உண வுக் கொடுப்பனவுத் தொகை கிட்டத்தட்ட 10 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் இந்த உணவுக் கொடுப்பனவு அதிகரிக்கப் பட்டுள்ளது.

இனிவரும் மாதாந்த ஊதியத்துடன் இந்த உணவுக் கொடுப்பனவுத் தொகையும் சேர்த்து வழங்கப்படவுள்ளது. (ம-இ)



## சீனாவிடமிருந்து இரண்டு கண்காணிப்பு விமானங்கள்

கொழும்பு, ஜூன் 22

சீனாவிடமிருந்து இரண்டு கண்காணிப்பு விமானங்களை வாங்குவதற்கு இலங்கை விமானப்படை தீர்மானித்துள்ளது.

சீனாவின் தெற்காசிய தேசிய விமான தொழில்நுட்ப இறக்குமதி மற்றும் ஏற்று மதிக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் லியு சுவான் மற்றும் விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்சன் பத்திரன ஆகியோருக்கு இடையில் இந்தக் கொள் வனவு ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது.

இந்த விமானங்களின் மூலம் நாட்டின் வான் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடி யும் என்றும், அது பிராந்தியப் பாதுகாப் புக்கும் உதவியாக அமையும் என்றும் இலங்கை விமானப்படை தெரிவித்துள் ளது. (ம)

## 'லைசென்ஸ்' காலாவதி நீடிப்பு

கொழும்பு, ஜூன் 22

சாரதி அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியா கும் காலத்தை இரண்டு ஆண்டுகளால் நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது என மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் திணைக்களத்தின் ஆணை யாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீர சிங்க தெரிவிக்கையில்,

சாரதி அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடி யாகும் காலத்தை நீடிப்பதற்கான நடவடிக் கைகள் கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டுள் ளன. செல்லுபடியாகும் காலத்தை நீடிப் பது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் இந்த வாரத்துக்குள் வெளியிடப்படும்.

காலாவதியான சாரதி அனுமதிப்பத்திரத் தைப் புதுப்பிப்பதில் மக்கள் எதிர்கொள் ளும் சிரமங்களைக் கருத்திற்கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது - என் றார். (ச-இ)

நாளை

23.06.2023
வெள்ளிக்கிழமை
ஆனி 08

சுபநேரம் : 05.54 - 07.24
ராகுகாலம் : 10.24 - 11.54

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# டெங்கு ஒழிப்புச் செயலணி ஊழியருக்கு நிரந்தர நியமனம்

## சுகாதார அமைச்சர் உறுதியளிப்பு

**கொழும்பு, ஜூன் 22**

**டெங்கு ஒழிப்புச் செயலணிக்காக இணைத்துக் கொள்ளப்பட்டவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. அதுதொடர்பில் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்படவுள்ளது என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, டெங்கு ஒழிப்புச் செயலணிக்காக இணைத்துக் கொள்ளப்பட்டவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும் என முன்வைத்த யோசனைக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்;

எதிர்க்கட்சித் தலைவரின் யோசனையை வரவேற்கிறோம். டெங்கு ஒழிப்பு செயலணிக்காக இணைத்துக் கொள்ளப்பட்டவர்கள், மேற்படி செயலணியில் உள்ளவர்கள் 8 வருடங்களுக்கு மேல் கடமையாற்றி வருகின்றனர். தினக்கொடுப்பனவாக அவர்கள் 700 ரூபா மட்டுமே பெற்று அர்ப்பணிப்புடன் சேவையாற்றுகின்றனர்.

அதற்கமைய அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க மீண்டும் ஓர் அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பிக்கவுள்ளேன் - என்றார். (ச-இ)

# கைது!

கோப்பாய் மத்தியில் கசிப்பை உடைமையில் வைத்திருந்த இளைஞர் ஒருவர் நேற்று புதன்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார் எனப் கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். புலனாய்வுத் தகவலுக்கமைய சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் கைது நடவடிக்கையை மேற்கொண்டனர். அதேபகுதியைச் சேர்ந்த 23வயதான இளைஞரே 750 மில்லிலீற்றர் கசிப்புடன் கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபரை சட்ட நடவடிக்கைக்குட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். (ச-ரி2-125)

# ஒரு லட்சம் வேலைவாய்ப்பில் சுகாதாரச் சிற்றூழியரை உள்ளீர்க்க

## ஜனரய சுகாதாரச் சேவைகள் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 22

அரசாங்கம் கொண்டுவரவுள்ள ஒரு லட்சம் வேலைவாய்ப்புத் திட்டத்தில், சுகாதாரத் தொண்டர்களாகப் பணியாற்றிச் சிற்றூழியர்களாக உள்வாங்கப்பட்டு நியமனம் இரத்துச் செய்யப்பட்டவர்களை மீண்டும் இணைக்க வேண்டும் என ஜனரய சுகாதார சேவைகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஊடகவியலாளர் சந்திப்பில் அந்தச் சங்கத்தின் பிரதிநிதி எஸ்.முகுந்தன் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்;

கடந்தகாலத்தில் 186 சுகாதாரத் தொண்டர்கள் சுகாதாரச் சிற்றூழியர்களாக உள்வாங்கப்பட்டு அவர்களின் நியமனம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. தற்போது அரசாங்கம் ஒரு லட்சம் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஆட்களை உள்ளீர்க்கவுள்ளது.

இதில் நியமனம் வழங்கப்பட்டு இரத்துச் செய்யப்பட்ட சுகாதாரச் சிற்றூழியர்களை உள்வாங்க வடக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகள் ஆவன செய்ய வேண்டும் - என்றார். (ச-66)

# திருநங்கைகளிலும் எய்ட்ஸ் அவதானிப்பு

இலங்கையில் முதன்முறையாக திருநங்கைகள் மத்தியில் எய்ட்ஸ் தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டம் தெரிவித்துள்ளது.

2023ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் (மார்ச் வரையில்) ஒன்பது திருநங்கைகள் எய்ட்ஸ் தொற்றாளர்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். இந்தக் காலப்பகுதியில் தொற்றுக்குள்ளானோரின் மொத்த எண்ணிக்கை 165ஆகப் பதிவாகியுள்ளது. 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஓர் ஆண்டின் முதல் காலாண்டில் பதிவான அதிகபட்சத் தொற்றாளர்கள் எண்ணிக்கை இதுவாகும். (ம)

## கதிர்காம யாத்திரையில்

# பஸ் குடைசாய்வு; 10 பேர் படுகாயம்

கதிர்காமத்திலிருந்து யாத்திரிகளை ஏற்றிச் சென்ற பஸ் புரண்டு விபத்துக்குள்ளானதில் 10 பேர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அம்பாறை வழியூடாக மட்டக்களப்புக்குச் சென்றுகொண்டிருந்த தனியார் பேருந்து ஒன்றே நேற்று புதன்கிழமை அதிகாலை சம்மாந்துறையில் குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் 10 பேர் காயமடைந்த நிலையில் சம்மாந்துறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். பேருந்தின் சாரதி மற்றும் நடத்துநர் விபத்தையடுத்து தப்பியோடியுள்ளனர் எனவும் மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன எனவும் சம்மாந்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

# விசுவேச விநாயகர் ஆலய கொடியேற்றம் சனியன்று

யாழ்.மேலை வண்ணைநகர் ஸ்ரீ விசுவேச விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து உற்சவம் 10 நாள்கள் இடம்பெறும்.

எதிர்வரும் 28ஆம் திகதி புதன்கிழமை பூந்தண்டிகையும், முதலாம் திகதி சனிக்கிழமை சப்பறத் திருவிழாவும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் 3ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறும் என ஆலய பரிபாலனசபையினர் அறிவித்துள்ளனர். (ச)




வடக்கு ரயில் சேவை

# ஒன்றரை மணிநேரம் இனி குறையும்

யாழ்ப்பாணம், ஜூன் 22

வடக்கு ரயில் பாதையின் நவீனமயமாக்கல் நிறைவடைந்ததன் பிற்பாடு, கொழும்பு - காங்கேசன்துறைக்கு இடையிலான பயணநேரம் ஒரு மணித்தியாலம் 30 நிமிடங்கள் குறைவடையும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

வடக்கு ரயில் பாதையில் சமிக்ஞை அமைப்பை நவீனமயமாக்குவதற்காக இந்திய அரசாங்கம் 4 ஆயிரத்து 500 மில்லியன் அமெரிக்க டொலரை ஒதுக்க ஒப்புதல் அளித்துள்ளது.

தற்போது அநுராதபுரம் முதல் மாஹோ வரையிலான புகையிரதப் பாதை புனரமைக்கப்பட்டு வருகின்றது. அடுத்த இரண்டு மாதங்களுக்குள் இந்தத் திட்டம் நிறைவடையும்.

நவீனமயமாக்கல் நிறைவடைந்தவுடன் கொழும்பு மற்றும் காங்கேசன்துறைக்கு இடையிலான பயண நேரம் குறையும் என போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன குறிப்பிட்டார். (ச-ரி2)

# கடவுச்சீட்டு கைவிரல் பதிவு; சாவகச்சேரியில் ஆரம்பம்



தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்வதற்காக கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்யும் பணிகள் நேற்று புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம், பிரதேசத்தில் செயலக ஆட்பதிவு அலகில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைத்தார்.

கடவுச்சீட்டைப் பெற இணையத்தளம் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தவர்களுக்கு தொலைபேசிக்கு குறுந்தகவல் அனுப்பப்படும். குறுந்தகவலுக்கு அமைய பிரதேசசெயலக ஆட்பதிவு அலகில் தமது கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய முன்பள்ளியில் புதிதாக அமைக்கப்பட்ட திறன் வகுப்பறையின் திறப்பு விழா கடந்த 15ஆம் திகதி வியாழக்கிழமை மேற்படி முன்பள்ளியில் நடைபெற்றது. (ய-66)

தெல்லிப்பழைப் பிரதேசத்தில் கடந்த ஆண்டு, தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் பிரதேச செயலகத்தினால் கடந்த 19ஆம் திகதி திங்கட்கிழமை மதிப்பளிக்கப்பட்டனர். (ய-9)



தீவக கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற 'எல்லே' போட்டியில் அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலய பெண்கள் அணி 8ஆவது தடவையாக சம்பியனாகியது. கடந்த 19ஆம் திகதி திங்கட்கிழமை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் புங்குடுதீவு மகா வித்தியாலய அணி 30 பந்துகள் நிறைவில் 4ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

எதிர்த்து ஆடிய சதாசிவ மகா வித்தியாலய அணி 15 பந்துகள் நிறைவில் 5 ஓட்டங்களை பெற்று சம்பியனைத் தனதாக்கிக் கொண்டது. (ய-9)





உடுவில் பிரதேச செயலகத்தின் மாதாந்தக் கலைஞர்களின் ஒன்றுகூடல் மேற்படி பிரதேச செயலக மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. பிரதேச செயலர் த.முகுந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆசிரியர் விஜயனின் நெறியாள்கையில் வள்ளி திருமணம் இசை நாடகம் ஆற்றுகை செய்யப்பட்டது. (ய-66)





தென்மராட்சி மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலையத்தின் 75ஆவது ஆண்டு விழா மோகனதாஸ் விளையாட்டு மைதானத்தில் கடந்த 18ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதன்போது முதியோர் கௌரவிக்கப்பட்டதோடு நிலையத்தால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. அத்துடன் பல்வேறு கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ய-159)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
29 . 11 . 1934



மறைவு
18 . 06 . 2023

## திரு. யோகரத்தினம் துரைசிங்கம்

**(மணியர்பதி வீதி, கொக்குவில் மேற்கு)**

மானிப்பாயை பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட யோகரத்தினம் துரைசிங்கம் கடந்த (18.06.2023) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோகரத்தினம் - செல்லம்மா ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முத்தையா சௌந்தரம் தம்பதியினரின் அன்பு மருமகனும், செந்திமலர், பூபாலசிங்கம் (அமரர்), திருஞானவதி (அமரர்), சிலோசனாவதி, அற்புதவதி, சந்திராவதி, கமலாவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், விமலராஜ், ரவிராஜ், பத்மராஜ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், புஸ்பராணி, சசீலா, கிரிஜா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், விபிஜன், விபித்திரா, விபூஷா, நிதூஷன், விபு, பிருதுவி, கம்சாயினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.06.2023) வியாழக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

0775488934
0765692395, 0762574941

## புருனோவுக்கு பிணை; நடாஷாவுக்கு மறியல்

பௌத்த மதத்தை அவமரியாதை செய்யும் வகையில் கருத்துக்களை வெளியிட்டதாக கைதுசெய்யப்பட்ட சமூக ஊடகச் செயற்பாட்டாளர் நடாஷா எட்ரிசூரிய எதிர்வரும் 5 திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவருக்கு உதவிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட புருனோ திவாகர் சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் நேற்றுப் புதன்கிழமை இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

அதேவேளை மத நல்லிணக்கத்துக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் அறிக்கைகளை வெளியிட்ட ராஜாங்கனை சத்தரத்ன தேரரை எதிர்வரும் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கவும் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (ச-இ)


**தொடர்பு கொள்ளவும்**

யாழ். நாவலர் வீதியில் வளர்ப்பு நாய் ஒன்று கிடைத்துள்ளது. உரியவர்கள் தொடர்பு கொள்ளவும்.
076 821 9416


# பெயர் மாற்றம்

கனரத்தினம் வீதி, மாம்பழம் சந்தி அரியாலை No.64 வசிக்கும் **துரைராசா சிவகுமாரன்** ஆகிய நான் எனது பெயரை **துரைராசா சிவகுமார்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **துரைராசா சிவகுமார்** என்றே கையெப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

**துரைராசா சிவகுமார்**

# கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவன உரிமையாளர்
**தார்சீசியஸ் விவியன் விமலானந்தின்**
**பாசமிகு சகோதரி சொபியா வதனி**
(ஓய்வுபெற்ற ஆசிரியை - யா/ புனித யோண் பொஸ்கோ வித்தியாலயம்,
யா/ புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்)
அவர்களின் அன்புக் கணவர்

## சிங்கராசா வில்லியம் ஜோர்ச்

அவர்கள் 15.06.2023 வியாழக்கிழமை சுவிஸ்நாட்டில் அகால மரணமடைந்துள்ளார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஊழியர்கள்
**V V Mart & Construction**

(cs 25306) (N-1)

# மரண அறிவித்தல்

## பூதத்தம்பி கண்மணி



பிறப்பு 21.08.1933
இறப்பு 21.06.2023

புத்தூர் மேற்கு சிவன் கோவிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பூதத்தம்பி கண்மணி நேற்று (21.06.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து - முத்தி தம்பதிகளின் அன்பு புதல்வியும் காலஞ்சென்ற ஆறுமுகம் - எள்ளுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பூதத்தம்பியின் மனைவியும் சரஸ்வதி, பரமானந்தம் (கனடா), நாகரத்தினம் (சுவிஸ்), சந்திரசேகரம், யோகராசா, குணமலர், நடேஸ்வரி, கேதீஸ்வரன் (சுவிஸ்), கேதீஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயாரும், செல்லத்துரை, நாகேஸ்வரி (கனடா), கனகரத்தினம் (சுவிஸ்), கண்மணி, கலாநிதி, பஞ்சலிங்கம், குணரத்தினம், ரூபா, சின்னத்துரை ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சுதாயினி, கிருபாகரன்-வினோதினி, தயாகரன்-ஜெயவதனி(கனடா), திவாகரன்-விஜிதா,நித்தியசீலன்-பிருந்தா (கனடா), ஜெயந்தன்-ஜெசிந்தா (கனடா), சுதர்சன்-நிஷாந்தா (கனடா), விமலநாதன்-சுகிதா (லண்டன்), சுதாகரன்-பகிர்தா (ஜேர்மனி), சுகிதரன்-சரண்யா (சுவிஸ்), ஜெயந்தன்-சுகுணா (கனடா), ரமணன்-நித்தியா (கனடா),லதீபன்-கவிதா, சதீபன்-சுபாசினி (பிரான்ஸ்), றஜீபன், றமேஸ்-துசிந்தா, கோகுலன்-வைஷ்ணவி (பின்லாந்து), உஷாரமணன்-றாம்சத்தினி (பிரான்ஸ்), யதர்சன், யாழினி, யதூஷன், மயூரன்-நிரோஜா (அவுஸ்திரேலியா), காண்டீபன்-மஞ்சுளா (பின்லாந்து), செந்தூரன்-வதனா (பின்லாந்து), தினேஷ், வினோத்-திவ்யா, திலக்சிகா, தர்சிகன், தாரணன், யமிஸ்னா ஆகியோரின் அன்பு பேர்த்தியும், காவியன் (ஜேர்மனி), ஆர்த்திகா (லண்டன்), கவிநயன் (ஜேர்மனி), அக்ஷா (லண்டன்), அனயா (லண்டன்), அட்ஷயன், அஸ்னிகா , தரணிகன், தினுஸ்கா, சபியா (கனடா), சனோயன் (கனடா), அனீஸ் (கனடா), அபீனா (கனடா), கவின் (கனடா), அபிநயா (அவுஸ்திரேலியா), அபிநயன் (அவுஸ்திரேலியா), ரயானா (பின்லாந்து), வோவிகன் (பின்லாந்து), கவினாஸ் (பின்லாந்து), கேதுயன் (கனடா), ஆருஷன் (கனடா), லக்சன் (கனடா), வினுயன் (கனடா), சாய்சன் (கனடா), ஆதீசன் (கனடா),சத்விகன்,தியானேஷ்,திகாஷ்,அகிஸ்னா (பிரான்ஸ்), நஸ்மிதா(பிரான்ஸ்), நிஷான் (பிரான்ஸ்), அகினாஸ், அஸ்விகன் (பின்லாந்து), சர்ணிகா (பின்லாந்து) ஆகியோரின் அன்பு பூட்டியும், கந்தசாமி, பரமநாதன், தமயந்தி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.06.2023) வெள்ளிக்கிழமை காலை 09 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக புத்தூர் மேற்கு கிந்துசிட்டி இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் கோவிலடி
புத்தூர் மேற்கு, புத்தூர்.
(077 538 0049, 077 893 3631, 077 036 6296)

தகவல்:
குடும்பத்தினர்

(cs.50944 ) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய கடைத் திறப்பு விழா

சாவகச்சேரி மண்ணில் புதிய உதயம்!
எமது கடைத் திறப்பு விழாவில் கலந்து
சிறப்பிக்கும் வண்ணம் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.
எமது புதிய காட்சியறை!!!

N·JOY!
fashion makes smile

22 ஆனி 2023 — காலை 6.35 தொடக்கம் 8.05 வரை

212, கண்டி வீதி, சாவகச்சேரி, யாழ்ப்பாணம்
(சாவகச்சேரி பிரதேச செயலகம் முன்பாக)
(ராஜா பிவாஸா கட்ட தொகுதி)

+94(21)227 0277
+94 76 543 2320
njoyfashionlk@gmail.com

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## கிருபதாஸ் பானுஜா

(A/L மாணவி- Hindu Ladies College Jaffna)

தோற்றம்
21.04.2003





மறைவு
22.05.2022

எம் உயிரில் ஒன்றாய் கலந்து
எம் துயரத்தைப் போக்க வந்தவளே!
ஆனால் எம்மை துயரத்தில் ஆழ்த்தி
விட்டுப் போனவளே!
ஆண்டுகள் ஒன்று ஆனதம்மா!
உன் பிரிவு தந்த சோகங்கள்,
வடுக்களாய் நெஞ்சமதில், என்ன சொல்லி
ஆறுதல் மனதையே எப்போதும்
அழியாத உன் நினைவுகள்
நாதமாய் இசை மீட்டி நிற்குதம்மா
என்றும் உந்தன்
நினைவுகளுடன் ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.
பொன்னம்பலம் ராசன்
1ம் வட்டாரம், நயினாதீவு.
076 860 7064

(CS/50939)AH-1

மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்

கேள்வி கோரல் தொடர்பான அறிவித்தல்

**தேனீ வளர்ப்பு உபகரணங்கள் மற்றும் தேனீக்கூட்டம் விநியோகித்தல்.**

**Supply of Bee Keeping Equipment and Bee Colony**

1. மாவட்ட செயலகத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் விவசாய அமைச்சின் திட்டத்தின் கீழ் தேனீ வளர்ப்பு உபகரணங்கள் மற்றும் தேனீக்கூட்டம் என்பவறினை பயனாளிகளுக்கு வழங்குவதற்காக குறித்த பொருட்களை விநியோகம் செய்வதற்கான வழங்குனர்களைத் தெரிவு செய்யும் பொருட்டு மாவட்ட செயலாளர் சார்பாக திணைக்களப் பெறுகைக்குழு மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணத்தினால் கடை கொள்ளல் முறையில் கூறுவிலை கோரப்பட்டுள்ளது.

2. இது சம்பந்தமான கேள்வி ஆவணங்களை **22.06.2023 – 05.07.2023** வரையுள்ள காலப்பகுதியில் **மு.ப9.00 மணி தொடக்கம் பி.ப3.00** மணிவரை யாழ்ப்பாண மாவட்டச் செயலக பெறுகை அலகில் (அறை இல. 42) பெற்றுக்கொள்ளலாம்.

3. பூரணப்படுத்திய கேள்வி ஆவணங்கள் **05.07.2023 பி.ப 2.30மணிக்கு அல்லது** அதற்கு முன்பதாக **"தலைவர், திணைக்கள பெறுகைக்குழு, பெறுகை அலகு (அறை இல. 42), மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்"** என்ற முகவரியிடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும் அல்லது நேரடியாக செயலக பெறுகை அலகில் (அறை இல 42) உள்ள கேள்விப் பெட்டியில் இடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

4. இக்கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களுக்கு மாவட்ட செயலக பெறுகை அலகின் கணக்காளரின் 0212214633 என்னும் தொலைபேசி இலக்கத்துக்கு அல்லது jkprocurementunit@gmail.com எனும் ஈமெயில் முகவரிக்கு தொடர்புகொள்ளலாம்.

**கேள்வி கோரப்பட்டுள்ள பொருட்கள் தொடர்பான விபரங்கள் வருமாறு.**

| தொ.இல | பொருள் விபரம் | தொகை | விநியோகிக்கப்பட வேண்டிய இடங்கள் (பிரதேச செயலக பிரிவு) |
|---|---|---|---|
| 01 | தேனீப்பெட்டி (Bee Box) | 143 | சாவகச்சேரி, தெல்லிப்பளை, நல்லூர், கரவெட்டி, யாழ்ப்பாணம், கோப்பாய், உடுவில், வேலணை, நெடுந்தீவு |
| 02 | தேனீக்கூட்டம் ( Bee Colony) | 143 | |
| 03 | Stand | 143 | |
| 04 | தேன் பிரித்தெடுக்கும் கருவி(Honey Extractor) | 23 | |
| 05 | Smoker | 45 | |
| 05 | Bee Vail / Special hat | 45 | |

அரசாங்க அதிபர்,
மாவட்ட செயலாளர்,
மாவட்ட செயலகம
யாழ்ப்பாணம்

# மரண அறிவித்தல்

தோற்றம்
06 . 07 . 1954



மறைவு
20 . 06 . 2023

## பரராஜசிங்கம் செல்வராணி
(பெரியபிள்ளை)

சூளானை சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரராஜசிங்கம் செல்வராணி (பெரியபிள்ளை) நேற்றுமுன்தினம் (20.06.2023) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் கனகம்மாவின் அன்பு மகளும், காலஞ்சென்ற நாகலிங்கம் பார்வதி தம்பதிகளின் அன்பு மருமகளும், பரராஜசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், அமரர் நடராசா, அமரர் சண்முகராஜா, சாஞ்சிராணி, அமரர் சுவேந்திரராணி, புஸ்பராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், மதுசாளினி (நோர்வே), மயூரநாதன், மதுந்தினி (இலண்டன்), மதுசைலா (இலண்டன்), மாதீஸ்பரா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ரவிமோகன் (நோர்வே), கமலினி, ராமநாதன் (இலண்டன்), கஜன் (இலண்டன்), டயஷா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், கமலாதேவி, பாலசுப்பிரமணியம், லிங்கநாதன், சந்திரவேணி, தவராணி, நடராசா, மகாலிங்கம், அமரர் பத்மநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், லெனிஷா, விநோஷா, நவீன், மயூரிகன், தன்சிகா, சர்மிகா, மதுராம், யுவராம், கரிஷ்ராம், டயமிதன், டயந்தன், லோமிகா, யக்ஷனன், சயனிகா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.06.2023) வியாழக் கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
077 902 8526 மகள்: 077 617 6931 குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாய்க்குட்டிகளை...

கின்றது. கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியைத் தொடர்பு கொள்ள முயன்றபோதும், அவர் தொலைபேசி அழைப்புக்குப் பதிலளிக்கவில்லை.

கடந்த சனிக்கிழமை ஒரு மாதம் நிரம்பிய 7 நாய்க்குட்டிகளை ஒருவர் தீயில் இட்டுக் கொன்ற கோரச் சம்பவம் கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிருசுவில், தவசிக்குளம் பிரதேசத்தில் நடந்திருந்தது. இது தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் அடையாளப்படுத்தப்பட்டு யாழ்ப்பாணம் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஊடாக, சம்பவத்தின் நேரில் கண்டவரின் தொலைபேசி இலக்கம், சந்தேகநபரின் முகவரி, பெயர் விவரம் என்பன பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு வழங்கப்பட்டதுடன், சம்பவத்தை நேரில் சென்று ஆராயவும் கடந்த திங்கட்கிழமை இரவு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளின் முன்னேற்றம் தொடர்பாகக் கேட்டபோது, முறைப்பாடு கிடைக்கவில்லை என்றும், முறைப்பாடு கிடைத்தால் மட்டுமே விசாரணை மேற்கொள்ளமுடியும் என்றும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டப் பிரதிப் பொலிஸ் மா அதிபரிடம் இதுதொடர்பாகக் கேட்டபோது, அந்த அதிகாரியை நேரில் சென்று ஆராய வேண்டும் என்று அறிவுறுத்தியிருந்தேன். அவர் செல்லவில்லை, மீள அறிவிக்கின்றேன் என்று தெரிவித்திருந்தார்.

நேற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் உத்தியோகபூர்வ தொலைபேசி எண்ணுக்கு பல தடவைகள் அழைப்பெடுத்தபோதும், அவரைத் தொடர்புகொள்ள முடியவில்லை. பொலிஸ்நிலையத்துக்கு அழைப்பெடுத்து இந்தச் சம்பவம் தொடர்பாக வினவியபோது, இதுவரை சந்தேகநபர் எவரும் கைது செய்யப்படவில்லை என்று பதிலளிக்கப்பட்டது.

தீவகத்தில் நாய் ஒன்றின் கால்கள் வெட்டப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்ட காணொலி ஒன்று அண்மையில் சமூக வலைத்தளங்களில் பரவியபோது, யாழ்ப்பாணம் பொலிஸார் துரித நடவடிக்கை எடுத்து சந்தேகநபர்களைக் கைது செய்திருந்தனர். ஆனால், போதிய தகவல்கள் வழங்கப்பட்டும், கொடிகாமம் பொலிஸார் நாய்க்குட்டிகளை எரித்தவர் மீது இன்னமும் எவ்வித நடவடிக்கையும் எடுக்காதுள்ளமை விலங்கு ஆர்வலர்கள் மத்தியிலும், மக்கள் மத்தியிலும் கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (அ-எ-125)

## வலயப்...

இலங்கை ஆசிரியர் சங்கம் பெரும் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்கும்.

-இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜனின் நிர்வாக முறைகேடுகள், அதிகார துஷ்பிரயோகங்கள் மற்றும் இரத்மலானையிலுள்ள வடமாகாண அரச உத்தியோகத்தர்களின் தங்குமிடத்தில் குடிபோதையில் மிகக் கீழ்த்தரமாக செயற்பட்டிருந்தமை போன்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக வடமாகாணக் கல்வியமைச்சின் செயலாளருக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது. இந்த முறைப்பாடுகள் தொடர்பாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு இதுவரை பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று அந்தக் கடிதத்தில் அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் தொடர்பாக 2020.06.30 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழுவால் 9 குற்றச்சாட்டுக்கள், வடமாகாண கல்வியமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டு அப்போது வடமாகாண ஆளுநராகவிருந்த, தற்போதைய ஆளுநருக்கும் பிரதியிடப்பட்டிருந்தது. அதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதை அறிய முடிகின்றது.

பின்னர் அவரது அதிகாரத் துஷ்பிரயோக நடவடிக்கைகள் தொடர்பாக, கிளிநொச்சி கல்வி கலாசார மேம்பாட்டு இணையத்தால் 28 விடயங்கள் பட்டியலிடப்பட்டன எனக் குறிப்பிட்டு, விசாரணை அறிக்கையை வடமாகாண ஆளுநர் செயலகத்தின் 2021.05.17 ஆம் திகதிய கடிதம் மூலம் கோரப்பட்டிருந்தபோதும், அந்த அறிக்கை வடமாகாண ஆளுநர் செயலகத்துக்குக் கிடைக்காமை காரணமாக, வடமாகாண ஆளுநரின் உதவிச் செயலாளரால் 2022.02.11 ஆம் திகதிய G/NPC/A7/ZDE.Matt/2022/02 இலக்க கடிதம் மூலம் இவை தொடர்பாக விசாரணையை நடத்தி ஒரு வாரகாலத்துக்குள் அறிக்கை அனுப்ப வேண்டும் என்று வடமாகாணக் கல்வியமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

ஆனால் எந்தவிதப் பொருத்தமான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படாத நிலையில், கிளிநொச்சி மாவட்ட கல்விச் சமூகத்தினரால், ஆதாரங்கள் குறிப்பிடப்பட்டு, அவரது பழிவாங்கல்கள், முறைகேடுகள் தொடர்பாக 2022.09.22 ஆம் திகதி வடக்கு மாகாண ஆளுநருக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. அத்துடன் பரீட்சைக்குப் பொறுப்பான கிளிநொச்சி தெற்கு வலய பிரதிக் கல்விப் பணிப்பாளரிடமிருந்து பொறுப்புக்களை தன்னிச்சையாகப் பெற்று தனக்கு இசைவான நபர்களுடன் பரீட்சைகளை நடத்தி வருகின்றார் என்னும் குற்றச்சாட்டும் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வருகின்றது.

கி.கமலராஜனின் முறைகேடுகளுக்கும் மோசடிகளுக்கும் துணைபோகாத பதவி நிலை உத்தியோகத்தர்கள் மற்றும் அதிபர்கள் பலர் பழிவாங்கல் இடமாற்றங்கள் செய்யப்பட்டுள்ளனர். இவரது பழிவாங்கல் செயற்பாடுகளுக்கு முன்னைய செயலாளர்களும் வலயக் கல்விப் பணிப்பாளரால் தவறாக வழி நடத்தப்பட்டுள்ளனர். தற்போதுள்ள பதவி நிலை உத்தியோகத்தர்களையும் வெளியேற்றும் முயற்சியாக பலரின் மாதாந்த வேலைத் திட்டம் மற்றும் தரக் கணிப்பீடு போன்றவற்றையும் தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து தடுத்து வைத்துள்ளார்.

கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு அப்போதிருந்த வடமாகாண கல்வியமைச்சின் செயலாளரோ, வடமாகாண ஆளுநரோ அக்கறையுடனோ பொறுப்புடனோ செயற்பட்டிருக்கவில்லை என்பதையே எம்மால் அவதானிக்க முடிகின்றது.

2022.12.20 ஆம் திகதியளவில் ஆரம்பப் புலனாய்வு நடவடிக்கைக்காக குழு ஒன்று நியமிக்கப்பட்டிருந்த நிலையில், அந்தக் குழுவும் பக்கச்சார்பாகவே செயற்பட்டுள்ளது என்பதை எம்மால் அவதானிக்க முடிகின்றது.

பல்வேறு அச்சுறுத்தல்களையும், சவால்களையும் எதிர்கொண்டுவரும் வடமாகாணக் கல்விச் சமூகத்தை, வழிநடத்த வேண்டிய கல்வி அதிகாரிகள் தரத்தில் உள்ள கி.கமலராஜனின் சீர்கேடான அருவருக்கத்தக்க இழிவான நடவடிக்கைகளுக்கு உடன் விசாரணைகள் ஆரம்பிக்கப்படவேண்டும் என்பதுடன், சுதந்திரமான விசாரணை நடத்தப்படுவதற்குரிய நம்பிக்கையின் அறிகுறியாக கி.கமலராஜன் வடமாகாண கல்வித் திணைக்களத்திலோ அல்லது வடமாகாண கல்வியமைச்சிலோ உடனடியாக இணைக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றோம். இவ்வாறான இணைப்பின் மூலமே பாதிக்கப்பட்ட பலர் சுதந்திரமாக சாட்சியங்களை வழங்குவதற்குரிய சூழல் ஏற்படுத்தப்படும்- என்றுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் அனுப்பியுள்ள இந்தக் கடிதத்தின் பிரதிகள் வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு மாகாண பிரதம செயலாளர் ஆகியோருக்கும் பிரதியிடப்பட்டுள்ளன. (அ-எ-இ)

## அபிவிருத்திக்...

சந்திப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அழைத்துள்ளார்.

அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் சமுர்த்தி திணைக்கள உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடுவது என்று சமுர்த்தித் திணைக்கள தலைமையக முகாமையாளர், மகாசங்க மற்றும் கருத்திட்ட முகாமையாளர்கள், வங்கி முகாமையாளர்கள், அனைத்து வெளிக்கள சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் தலைமையகம், மகாசங்கம், வங்கிகள் ஆகியவற்றிலிருந்து தலா ஒவ்வொரு சமுர்த்தி உத்தியோகத்தர்கள் கலந்துகொள்ளவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் இன்று இந்தக் கலந்துரையாடல் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலகங்களும் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டே இந்தக் கூட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை - நாளை வெள்ளிக்கிழமை யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்துக் கிராம அலுவலர்களையும் சந்திப்பதற்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அழைப்பு விடுத்துள்ளார்.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர் என்ற கோதாவில் இந்த அழைப்புக்களை அவர் விடுத்துள்ளார். அரசியலுக்காகவே அவர் இந்தக் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளாரா என்ற சந்தேகங்களும் எழுந்துள்ளன. (அ-ஒ-5)

## சந்தேகங்களைத்...

தெரிந்துகொள்வதற்காகவே நான் இன்று இங்கு (குருந்தூர்மலை) வந்தேன்.

இவ்வாறு தெரிவித்தார் புதிய ஹெல உறுமயவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில.

முல்லைத்தீவு மாவட்டத்தின் குருந்தூர்மலைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தலைமையிலான குழுவினர் நேற்றுச் சென்றதுடன், வழிபாடுகளிலும் ஈடுபட்டனர். அதன்பின்னர் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பாதுகாப்பதோடு, மக்களின் வாழ்வாதாரத்தையும் பாதுக்க வேண்டுமென்பது எமது நோக்கம். நான் இங்கு பார்த்தவை தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும் பிக்குகளுடன் கலந்துரையாடுவேன். அதைத் தொடர்ந்து இந்த விடயம் தொடர்பான சரியான தீர்மானம் மேற்கொள்ளப்படும். இரண்டு தரப்பு கதையை கேட்டேன். இலங்கை தொல்பொருள் திணைக்களம், பிக்குமார் மற்றும் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரதும் கதையை நான் கேட்கவேண்டும். பின்னர் எந்தவொரு தரப்பினரையும் பாதிக்காத வகையில் இந்தப் பிரச்சினை தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

வடக்குமற்றும்கிழக்கைப்பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இங்கிருந்து கொழும்புக்கு வந்து மக்கள் பிரச்சினையைக் கூறுகின்றார்கள். எனினும், அதன் உண்மைத்தன்மை எமக்குத் தெரியாது. அதனைத் தெரிந்து கொள்வதற்காகவே நான் இன்று வந்தேன்.

இது 2 ஆயிரத்து 100 வருடங்கள் பழைமையான விகாரை. இந்த விகாரை எமக்கு மாத்திரமன்றி முழு உலகுக்கும் சொந்தமானது. இவ்வாறான பழமையான சொத்துக்கள் வேறு நாடுகளில் இல்லை. வயல் நிலங்களை தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த நிலங்களாக பெயரிட மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சிகள் தொடர்பில் ஆராயவேண்டும். எதனடிப்படையில் திணைக்களத்தினர் இந்த முயற்சியை மேற்கொண்டுள்ளார்கள் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

இந்த வயல் நிலங்களுக்கடியில் ஏதாவது இருப்பதை தொல்பொருள் திணைக்களத்தினர் இனங்கண்டிருந்தால், அந்த இடம் பாதுகாக்கப்பட வேண்டும். மக்களால் எந்த இடத்திலும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். இதனடிப்படையில், மக்களுக்கு எந்தவொரு தீங்கும் நடக்க நாம் இடமளிக்கமாட்டோம் - என்றார். (அ-எ-22)

## குருந்தூர்மலை...

பட்டிருந்த நிலையில், அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் ஒன்று அங்கு முன்னெடுக்கப்பட்டது.

குருந்தூர்மலை அடிவாரத்தில் ஒன்று கூடிய தண்ணிமுறிப்பு மக்களும், மக்கள் பிரதிநிதிகளும் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

குருந்தூர்மலை அடிவாரம் மற்றும் குருந்தூர்மலையை அண்மித்த பகுதிகளில் பெரும் எண்ணிக்கையான பொலிஸார் நேற்றுக் குவிக்கப்பட்டுப் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தமிழ் மக்களின் பூர்வீக இடங்களில் மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட சிங்கள மற்றும் பௌத்த மயமாக்கல் செயற்பாடுகளுக்குக் கடும் கண்டனங்களை வெளியிட்டனர்.

பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களான து.ரவிகரன், க.சிவநேசன் ஆகியோரும், புதுக்குடியிருப்பு பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் இ.சத்தியசீலன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயற்பாட்டாளர் பீற்றர் இளஞ்செழியன் போன்றோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். (அ-எ-246)

## ஊடகவியலாளர்கள்...

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுயாதீன ஊடகவியலாளர் த.பிரதீபன் மற்றும் கிளிநொச்சியைச் சேர்ந்த சுயாதீன ஊடகவியலாளர் த.பரமசிவன் ஆகியோரிடமே வாக்குமூலம் பெறப்பட்டது.

மருதங்கேணியில் ஏற்பட்ட முரண்பாட்டுச் சம்பவம் தொடர்பான காணொலி சமூக வலைத்தளங்களில் பரவியிருந்தது. அந்தக் காணொலிகள் மற்றும் சம்பவம் தொடர்பான செய்திகள் ஊடகங்களில் வெளியானமை தொடர்பாகவே ஊடகவியலாளர்களிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. (அ-எ-26,20)

noolaham.org | aavanaham.org

### கடன்...

சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கு பரீஸ் கிளப் நாடுகளின் உத்தரவாதம் அவசியம் என்ற பின்னணியில் பரீஸ் கிளப்பின் உதவி பொதுச்செயலாளர் டுபெரொட்டுக்கு எழுதிய கடிதத்தில், நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதானி வீ. உருத்திரகுமாரன் இந்தக் கோரிக்கை முன்வைத்துள்ளார். அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இலங்கை சர்வதேச நியமங்கள் மற்றும் ஏனைய நியமங்களுக்கு அமைவாக சர்வதேச குற்றங்களுக்கு பொறுப்புக்கூற வேண்டும். உள்நாட்டுப் போரின் போது இலங்கை தனது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.3 வீதத்தை இராணுவச் செலவினங்களுக்காக ஒதுக்கியது.

மூன்றாம் கட்ட ஈழப் போர் நடந்த 1995 மற்றும் 2002ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 1.3 மில்லியன் டொலரும், சமாதான காலமான 2002 மற்றும் 2005 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 1.5 மில்லியன் டொலரும், நான்காம் கட்ட ஈழப்போர் இடம்பெற்ற காலப் பகுதியான 2006 முதல் 2009 ஆம் ஆண்டு வரை 1.5 மில்லியன் டொலரும் ஒதுக்கப்பட்டன. 2009ஆம் ஆண்டு போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு முடிவடைந்த பின்னரும், இலங்கை தனது இராணுவத்தை உயரடுக்கு சிறப்பு அதிரடிப் படை, பொலிஸ்துறை என்று தொடர்ந்து விரிவுபடுத்தி இன்று தனது வருடாந்த செலவினத்தில் 11 வீதத்தை பாதுகாப்புக்காக ஒதுக்கி வருகின்றது.

உண்மையான இராணுவச் செலவு போர்க் காலத்தை விட 1.7 மில்லியன் டொலர் அதிகம். ஓய்வுபெற்ற இராணுவத்தினருக்கான ஓய்வூதிய கொடுப்பனவுகளுக்காக மட்டும் 170 மில்லியன் டொலரைச் செலவிட்டதன் மூலம், 99 வீதமான இராணுவத்தினரை சுறுசுறுப்பான சேவையில் வைத்திருக்கும் உலக நாடாக இலங்கை மாறியுள்ளது.

இலங்கை அரசாங்கம், போருக்குப் பின்னரும், பாதுகாப்புப் பணியாளர்களின் வேதனத்தை 45 வீதம் உயர்த்தி, தமிழர்களின் தாயகத்தில் தனது இராணுவத்தின் பெரும் பகுதியை நிலைநிறுத்தியுள்ளது. கலிபோர்னியாவை தளமாகக் கொண்ட ஓக்லாண்ட் நிறுவனத்தின் அறிக்கையின்படி, பாரம்பரிய தமிழர் நிலத்தில் இராணுவ ஆக்கிரமிப்பு தீவிரமானது, வடக்கு மாகாணத்தில் ஆறு பொதுமக்களுக்கு தலா ஒரு இராணுவச் சிப்பாய் வீதம் உள்ளார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இரண்டு பொதுமக்களுக்கு தலா ஒரு இராணுவச் சிப்பாய் வீதம் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். இதைத் தொடர்ந்து சிங்களக் குடியேற்றங்கள், வெற்றிச் சின்னங்கள், தொல்லியல் இட ஒதுக்கீடுகள், வன விலங்கு சரணாலயங்கள், வனப் பாதுகாப்புப் பகுதிகள், சிறப்புப் பொருளாதார வலயங்கள் இவை அனைத்தும் உள்ளூர் தமிழ் மக்களின் நிலத்தைப் பறித்து அவர்களின் கலாசார அடையாளத்தை துடைத்தழிக்கும் வகையில் மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழ் மக்களுக்கு எதிராக இனப்படுகொலை நடத்தப்பட்டுள்ளது என்று பேர்லின் மக்கள் தீர்ப்பாயம் கூறியுள்ளது. எனினும் இதுவரை எவரும் நீதியின் முன் நிறுத்தப்படவில்லை. 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் 4ஆம் திகதியன்று திருகோணமலைமாவட்டத்தில் உள்ள மூதூரில் அக்ஷன் பாஃம் என்ற பிரான்ஸ் உதவி நிறுவனத்தைச் சேர்ந்த 17 இலங்கை பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர். பதினைந்து வருடங்களாகியும் மூதூர் உதவிப் பணியாளர்களின் படுகொலைக்கு நீதி கிடைக்கவில்லை. இராணுவச்செலவினங்களைக் குறைப்பதற்கும், சர்வதேச குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறுவதற்கும் இலங்கைக்கான கடன் மற்றும் உதவிகளை மறுசீரமைப்பதற்கும், இலங்கைத் தீவில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், மேம்படுத்துவதற்கும், பங்களிப்பதற்கும் இதுவே சரியான தருணம் - என்றுள்ளது. (அ-எ,இ)

### மன்னாரில்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மன்னார் மாவட்டத்தின் நானாட்டன், வஞ்சிக்குளம், ஆட்காட்டிவெளி ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்படும் நெற்செய்கையில் பனிப்பூச்சித் தாக்கம் இனங்காணப்பட்டுள்ளது. பனிப்பூச்சி நெல்லின் பச்சையத்தை உணவாக உட்கொள்ளும். அதனால் உணவுத் தொகுப்பு, ஒளித்தொகுப்பு என்பன பாதிப்படைந்து விளைச்சல் குறையும். சுமார் 200 ஏக்கர் நெற்செய்கை பனிப்பூச்சித் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளது. விவசாயிகள் பனிப்பூச்சித் தாக்கத்தை அடையாளம் காணும் சந்தர்ப்பத்தில் அருகிலுள்ள கமநல சேவைகள் நிலையத்தில் அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொள்ளமுடியும் - என்றார். (அ-எ,125)

### விபத்தில்...

என்ற ஆசிரியையே உயிரிழந்தவராவார். கடந்த திங்கட்கிழமை செட்டிகுளத்தில் வீதியால் பயணித்தபோது ஆசிரியை மீது மோட்டார் சைக்கிள் ஒன்று மோதியது. அதில் படுகாயமடைந்த அவர் வவுனியா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். அவர் சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாகச் செட்டிகுளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-எ,110)

### இந்தியாவில்...

பட்டிருந்த நிலையில், சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்தியாவில் இருந்து நாடு கடத்தப்பட்ட இவர் 90 நாள்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டார் என்று பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புத் தொடர்பாக இராணுவத்தினருக்குத் தகவல்களை வழங்கியவர்களைக் கொலை செய்தல் போன்ற செயற்பாடுகள் இவராலும், இவரது குழுவாலும் மேற்கொள்ளப்பட்டது என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இவர் 2019ஆம் ஆண்டு நாட்டை விட்டு வெளியே சென்ற இவர், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த இலங்கீத் மாஸ்டர் என்பவருடன் இணைந்தே தப்பிச் சென்றார் என்றும் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

### காணி...

கிளிநொச்சி, உருத்திரபுரத்தைச் சேர்ந்த ஒருவரே காயமடைந்துள்ளார்.

இவர் காணி வாங்குவதற்காகத் தரகர் ஒருவருடன் காணி பார்க்கச் சென்றபோது, அங்கு கட்டப்பட்டிருந்த கட்டுத்துப்பாக்கி வெடித்து காலில் காயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளைப் பளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-எ-113)


# மரண அறிவித்தல்

## திரு. சேனாதிராஜா இரத்தினராஜா



யாழ்.வேலணை முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, வெள்ளவத்தையை வதிவிடமாகவும்,நியூ கொழும்பு ஸ்ரோர்ஸ் (காலி) உரிமையாளருமான திரு. சேனாதிராஜா இரத்தினராஜா கடந்த (19.06.2023) திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சேனாதிராஜா - மனோன்மணி தம்பதிகளின் தவப்புதல்வனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - தங்கரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும், தயாநிதியின் ஆருயிர்க் கணவரும், கஜந்தினி (அவுஸ்திரேலியா), சிந்துஜா (இலங்கை), சைலஜா (இலங்கை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஹரன்குமார் (அவுஸ்திரேலியா), மதனன் (அவுஸ்திரேலியா), சாந்தகுமார் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஹேமாவின் (அவுஸ்திரேலியா) அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான கனகசபாபதி, செல்லத்துரை, இரத்தினம் மற்றும் நாகராசா (இலங்கை), காலஞ்சென்ற அன்னலெட்சுமி, இராசலெட்சுமி, மற்றும் சரசுமலர், பாக்கியலெட்சுமி ஆகியோரின் அன்பு மருமகனும், கண்மணி (சுவிஸ்), காலஞ்சென்றவர்களான நமசிவாயம், சின்னராசா ஆகியோரின் அன்புப் பெறாமகனும், ஸ்ரீஸ்கந்தராஜா (காந்தி - சுவிஸ்), சீதாலெட்சுமி (கலா - கனடா), மகாலெட்சுமி (லதா - இலங்கை), யோகலெட்சுமி (றசிலா - நோர்வே), பவானி (சுவிஸ்), சிவசோதி (சிவா - இலங்கை), நீதிராசா (நீதி - சுவிஸ்) ஆகியோரின் ஆருயிர் சகோதரரும், சாரதாதேவி (சுவிஸ்), செல்வரத்தினம் (கனடா), காலஞ்சென்ற மகேந்திரன் மற்றும் கேமதாஸ் (நோர்வே), ரவிச்சந்திரன் (கண்ணன் - சுவிஸ்), ராஜகுமாரி (ரஜனி - இலங்கை), அன்னசோதி (அமுதா - சுவிஸ்), அன்னலிங்கம் (கனடா), காலஞ்சென்ற தனபாலசிங்கம் (சுவிஸ்), பிரேமாமலர் (மலர் - சுவிஸ்), ஸ்ரீகாந்தி (ஸ்ரீ - சுவிஸ்), நவநீதன் (நீதன் - சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், விஜிதா (கனடா), விஜிதன் (சுவிஸ்), சுஜிதா (இலங்கை), சுஜிதன் (நோர்வே), சஜிதா (கனடா) , சஜிதன் (வைத்தியர் - யாழ்.போதனா வைத்தியசாலை), கஜிதன் (வைத்தியர் - யாழ்.போதனா வைத்தியசாலை), கஜீபன் (கனடா), மயூரன் (நோர்வே), லக்ஷன் (சுவிஸ்), மகிந்தன் (சுவிஸ்), சஜிலா, கிருஷா (இலங்கை), டனுசன், டிவ்யா (நோர்வே), நைனிஷா (சுவிஸ்), சஜந்தன், மகிந்தன் (கனடா), நமிதா, சயந்தன், அஜன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சுவிகரன், சுவிசினி (சுவிஸ்), டனுசிகா, வதுசிகா, டினோஜன் (இலங்கை), நிலக்ஷா, அட்சயன் (சுவிஸ்), நந்துஜா, நந்துஜன், நகித்தன் (சுவிஸ்) ஆகியோரின் பெரியப்பாவும், தனலட்சுமி (கனடா), ருக்குமணிதேவி (சுவிஸ்), சண்முகநாதன் (சுவிஸ்), சறோஜினிதேவி (சுவிஸ்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.06.2023) வியாழக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் (யாழ்ப்பாணம், கந்தர்மடம்) இடம்பெற்று பூதவுடல் சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுத் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.20, இந்துமகளிர் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

சிந்துஜா (மகள்) - +9477 762 8502
சைலஜா (மகள்) - +94 75 712 9788
சிவா (சகோதரர்) - +94 77 349 2620

தோற்றம் 10.06.1954
மறைவு 19.06.2023


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீப்பிடித்து எரிந்த வீட்டுக்குள் இறந்த நிலையில் குடும்பஸ்தர்

## வவு. பொலிஸார் விசாரணை

வவுனியா, ஜூன் 22

வவுனியா, தேக்கவத்தையில் உள்ள வீடொன்று நேற்று அதிகாலை தீப்பற்றி எரிந்த நிலையில், வீட்டில் இருந்து சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

வீடு தீப்பற்றிமை தொடர்பாக அயலவர்கள் வழங்கிய தகவலை அடுத்து அங்கு சென்ற நகரசபைத் தீயணைப்புப் பிரிவினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

வீட்டுக்குள் நுழைந்து ஆராய்ந்தபோது வீட்டின் உரிமையாளர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலை அடுத்து வவுனியா பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை முன்னெடுத்தனர். (அ-எ-18)

# திடீரென மயங்கியவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 22

மதிய உணவு அருந்திக் கொண்டிருந்தவர் திடீரென மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம், நாவற்குழியில் நடந்துள்ளது. யோகராஜா குகனராஜன் (வயது-34) என்பவரே உயிரிழந்துள்ளார்.

மதிய உணவு அருந்திக் கொண்டிருந்தபோது இவர் திடீரென மயங்கி வீழ்ந்துள்ளார். அவரை உறவினர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு சென்றபோது, அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று மருத்துவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். (அ-எ-26)

# தவறான முடிவெடுத்து இளைஞன் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 22

காரைநகரில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

தியாகராசா பிரகாஸ் (வயது-21) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார். இவர் 40 நாள்களேயான குழந்தையின் தந்தை என்று தெரிவிக்கப்படுகின்றது.

வீட்டில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக இவர் தவறான முடிவை எடுத்து உயிரை மாய்த்தார் என்று கூறப்படுகின்றது. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். (அ-எ-26)

## அல்லைப்பிட்டியில்...

மனித எலும்பு எச்சங்கள் சான்றுப்பொருள் ஆய்வுக்காக அனுப்பப்பட்டுள்ளன.

அல்லைப்பிட்டியில் நேற்றுமுன்தினம் தனியார் காணி ஒன்றில் மலசலகூடக் கட்டுமானத்துக்காக அகழ்வு மேற்கொண்டபோது மனித எலும்பு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அதையடுத்து அது தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதை அடுத்து, சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், அந்த இடத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் எடுத்திருந்தனர். நீதிமன்ற அனுமதி பெற்று நேற்று அந்த இடத்தில் அகழ்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

ஊர்காவற்றுறை நீதிவான் கஜநிதிபாலன் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வு நடவடிக்கையில் 27 பற்களும், மனித எலும்பு எச்சங்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

நேற்றுமுன்தினமும், நேற்றும் மீட்கப்பட்ட மண்டையோடு, பற்கள், எலும்புகள் சான்றுப்பொருள் ஆய்வுக்காக அனுப்பப்பட்டுள்ளன என்று ஊர்காவற்றுறைப் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (அ-எ-125)


### கட்டடம் வாடகைக்கு

206/ 2, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்
2300 சதுரடி கொண்ட கட்டடம் வாடகைக்கு உண்டு. (CDB வங்கிக்கு மேல் மாடி)
077 360 9005
(cs 253081) (N-1)

### வேலையாள்கள் தேவை

ஆண் உதவியாளர்கள் எங்கள் பலசரக்குக் கடைக்குத் தேவை. மாதத்துக்கு 30,000/= சம்பளம் வழங்கப்படும். (உணவும் தங்குமிடமும் வழங்கப்படும்.)
S.A.W & Sons
Hambantota
077 480 3379
(CS/50945) (AH-1)

### மணமகள் தேவை

1983 ஆம் ஆண்டு பிறந்த மகம் 2 ஆம் பாதம் நட்சத்திரம் உள்ள 7இல் செவ்வாய் உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை.
தொழில் வியாபாரம் - பான்ஷி & மல்ரிசெப்
077 724 6647, 077 757 1934
(cs 253307) (N-1)

### பௌதிகவியல்

By:- M. கருணாநிதி BSc (Hons)
2025 A/L
54, கலைமகள் வீதி, அரியாலை.
(077 618 3064)
ஆரம்பம்:- 25.06.2023 ஞாயிறு 6.30 pm
ஆங்கில, தமிழ் மூல வகுப்புகள்
2024 A/L வகுப்புகள் நடைபெறுகின்றன.
(CS/253049) (AH-1)

### வீடு வாடகைக்குத் தேவை

யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் விசாலமான வீடு வாடகைக்குத் தேவை.
Tel:077 9592 628

### DHL துரித பொதிகள் சேவை

▲ சகல நாடுகளுக்கும் கடிதங்கள், பொதிகள் அனுப்பிட முடியும்.
▲ மருந்து பொருட்கள், பழ வகைகள், எண்ணெய் வகைகள் மற்றும் இதர பொருட்கள் எம் ஊடாக அனுப்பிட முடியும்.
▲ 11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட சலுகைகள்
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S. வீதி,
(முட்டாஸ் கடைச் சந்தி), யாழ்ப்பாணம். T.P: 0777 55 45 28

### மணமகள் தேவை

01. காரைநகர்- இந்து கௌரவகுலம் (V), கேட்டை, 1986, Bio Medical (Bermingham University-uk) Germany மணமகனுக்கு மணமகள் தேவை.பதிவெண் - 34615
02. பருத்தித்துறை- இந்து கௌரவகுலம் (V), 1975, மிருகசீரிடம், Supermarket Manager, Divorce,UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
03. உடுப்பிட்டி - இந்து கௌரவகுலம் (V) 1990, அவிட்டம், Bsc Engineer, Newzeland மணமகனுக்கு மணமகள் தேவை.
04. காரைநகர். இந்து கௌரவகுலம் (V) 1992, சித்திரை, Bsc System Engineer, Singapore மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 34141
05. திருநெல்வேலி - இந்து கௌரவகுலம் (V) 1985, ரேவதி Network Administration,USA Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 33507
06. சங்கானை - இந்து கௌரவகுலம் (K) 1992, விசாகம் , BA(Hons), Accountant, UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 34210
07. சுன்னாகம் - சாவகச்சேரி இந்து கௌரவகுலம் (K) 1996, மிருகசீரிடம், Bachelor of Engineering (Hons), Australia Citizen, மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 32933

தொடர்புகளுக்கு- S.Sharma J.P Astrologer
Phone - 077 539 3728
Whatsapp - 077 803 8193

### காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 24 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
* பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
* புத்தூரில் தண்ணீர் தாங்கி அருகாமை (நிலப்பரப்பு)
* மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
* வியாபார நிலையங்கள் திருமண மண்டபங்கள் வீடு அமைப்பதற்கு உகந்த இடம்.
* பார்வையிடும் நேரம் காலை 06 மணிமுதல் மாலை 06 மணிவரை.
* நன்னீரூற்று.
* ஒரு பரப்பின் விலை 300,000/= (மூன்று லட்சம்) மட்டும்.

தொடர்பு: 076 7336 047
076 7558 606

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



ஜனனம் 30 . 09 . 1985
மறைவு 25 . 05 . 2023

கடந்த 25.05.2023 அன்று இறைவனடி சேர்ந்த எமது மகன்

அமரர் வைத்திய கலாநிதி
**வேலாயுதம் சாரங்கன்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (22.06.2023) வியாழக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை மறுதினம் **(24.06.2023) சனிக்கிழமை** காலை 7.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும், மதியபோசன நிகழ்வும் அன்று முற்பகல் 11.00 மணியளவில் **பலாலி வீதி, கோண்டாவிலில் அமைந்துள்ள இராசமணி மண்டபத்திலும்** நடைபெறவுள்ளது.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இருபாலை வீதி,
கோண்டாவில்.
(CS/50931)AH-1
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.